

பரமக்குடி சட்டமன்றத் தொகுதி சமூக வலைதளப்பயிற்சி பாசறை கூட்டம் 18.01.2025 அன்று பரமக்குடி தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 303 பாக இளைஞரணி பொறுப்பாளர்களுக்கும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சண்.சம்பத்குமார் ஏற்பாட்டில் ஸ்மார்ட் வாட்ச் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பால்வளம் மற்றும் கதர் கிராம தொழில் வாரிய துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் எ.ன்.இன்பா ரகு, ஜி.பி.ராஜா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத் ராஜா உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## மொழிப்போர்த் தியாகிகளான தாளமுத்து, நடராசன், தருமாம்பாள் நினைவிடத்தில் –

# முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்துகிறார்!

## கழகத் தோழர்களுக்கு – சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாளை முன்னிட்டு, தீந்தமிழ் காக்க தம் தேக்கு மர தேகங்களை வெந்தழலுக்கு விருந்தாக்கி மறைந்தும், தமிழர் நெஞ்சில் மறவாமல் வாழ்கின்ற வீரமறவர்களாம், தமிழ் காத்த தியாக தீபங்கள் தாளமுத்து, நடராசன் மற்றும் டாக்டர் தருமாம்பாள் ஆகியோருக்கு வருகிற 25.1.2025 சனிக்கிழமை அன்று காலை 8.30 மணி அளவில் சென்னை மூலக்கொத்தளம் மயானத்தில் உள்ள நினைவிடத்தில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் கழக முன்னணியினர் மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

அதுபோது கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவ அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, நெசவாளர் அணி, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் வருகை தந்து மொழிப்போர்த் தியாக தீபங்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

நாள்: 21.1.2025

**ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர்
சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

## அமைச்சர் ஆர்.காந்தி – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தலைமையில்

# ஆற்காடு ஒன்றிய மாணவரணி டி.மோகன்ராஜ் - பி.கீர்த்தனா மணவிழா!

## ஜெ.எல்.ஈஸ்வரப்பன் - ஆர்.ஜி.வினோத் காந்தி - ஏ.கே.சுந்தரமூர்த்தி - எம்.வி.பாண்டுரங்கன் முன்னிலை!

ஆற்காடு, ஜன. 21-

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம் - முப்பதுரெட்டி கிராமத்தைச் சேர்ந்த ஆர்.தனுஷ்கோடி - சூரியகலா ஆகியோரின் புதல்வரும் - ஆற்காடு ஒன்றியக் கழக மாணவரணி துணை அமைப்பாளருமான டி.மோகன் ராஜிக்கும், சென்னை, மேற்கு சைதாப்பேட்டையைச் சேர்ந்த தி.சி.பூங்காவனம் - சங்கரி ஆகியோரின் புதல்வி பி.கீர்த்தனாவுக்கும் மணவிழா 27.1.2025 - திங்கட்கிழமை காலை 6 மணியளவில் இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, இளங்குப்பன் தெருவில் அமைந்துள்ள இந்தி ராணி ஜானகிராம முதலியார் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.



இம்மணவிழா வரவேற்பு 26.1.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி, ஒன்றிய முன்னாள் இணையமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழாவில் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ஆர்.ஜி.வினோத் காந்தி, ஏ.கே.சுந்தரமூர்த்தி, எம்.வி.பாண்டுரங்கன், வீ.சரவணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில் ஏ.வி.சாரதி, ஏ.வி.சரவணன், புவனேஷ்வரி சத்தியநாதன், காந்திமதி பாண்டுரங்கன், தேவி பென்ஸ்பாண்டியன், ஜெ.சண்முகம், டாக்டர் பி.என்.எஸ்.சரவணன், எஸ்.அசோக், ஸ்ரீமதி நந்தகுமார், டாக்டர் பவளக் கொடி சரவணன், ஜெ.ரமேஷ், பி.பிச்சாண்டி, எல்.தட்சணாமூர்த்தி, ஜெ.சரவணன், பி.தணிகைவேல், பி.ஜி.பத்மநாபன், ஆ.ப.கணேசன், எஸ்.வினோத், பி.ஆனந்தன், வேதா சீனிவாசன், சிவசங்கர், ஜெ.தொன்போஸ்கோ எம்.பி.சேகர், ஜி.பண்டரிநாதன், வி.மணி, எம்.உமா மகேஷ்வரன், ரோஜா மனோகரன், பி.அன்பு, வி.கோபு, வி.தாமோதரன், பி.என்.எஸ்.ராஜசேகரன், பொன்ராஜசேகர், கே.சொக்கலிங்கம், ஏ.ஜி.ரவிக்குமார், எஸ்.ருக்மணி, ஏ.ஏ.கே.கஜேந்திரன், ஏ.ஜி.லிங்கேஷ், ஆர்.கோபு, ஏ.சிவா, வி.விஜயகுமார், மி.கஜபதி, கே.தனிகேசன், எம்.சிவாஜி, சபியுல்லா, ஏ.ஜெ.ரமேஷ், கே.பிரபாகரன், வி.சீனிவாசன், ஜி.சாரதி, ஏ.ஜெ.குருமூர்த்தி, பி.யுவராஜ், பி.ராம்கி, எஸ்.பிரகாஷ், ஜி.பாலாஜி, சல்மா, என்.கார்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்துகின்ற னர்.

இரா.சரண்ராஜ் நன்றி கூறுகிறார்.



திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற கிராம ஊராட்சிகளுக்கான குப்பை சேகரிக்கும் பேட்டரி வாகனத்தை மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கொடி அசைத்து துவக்கி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கு.ராஜமாணிக்கம், கந்திலி ஒன்றியக்குழு தலைவர் திருமதி. திருமுருகன், கந்திலி தெற்கு ஒன்றியச் செயலாளர் டி.அசோக்குமார், கந்திலி மத்திய ஒன்றியச் செயலாளர் கே.ஏ.குணசேகரன், கந்திலி கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் அ.மோகன்ராஜ், மாவட்ட கவுன்சிலர் சுப்பிரமணி, ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் மோகன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.தசரதன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எம்.சிங்காரவேலன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், தூய்மை பணியாளர்கள் உடன் இருந்தார்கள்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட வாகரையில் நடைபெற்ற பசுமை மாரத்தான் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்.

## இதுவரை 1 கோடியே 87 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது!

# ஜன.25 வரை பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கல் நீட்டிப்பு!


## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தகவல்!

சென்னை, ஜன.21-

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு துவக்கி வைக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 18.01.2025 வரை 85 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழர்களின் பழம்பெரும் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கும் விழாவாகப் பொங்கல் திருநாள் தமிழ்நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாள் அறுவடைத் திருவிழாவாகவும், இயற்கைக்கும், உழவர் பெருங்குடி மக்களுக்கும் அவர்தமோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாகவும் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.



2025-ஆம் ஆண்டு தைப் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக்கரும்பு வழங்கப்படும்" எனவும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள இலவச வேட்டி-சேலைகள் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து வழங்கப்படும் எனவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என அறிவித்தார்கள்.

அதன்படி, கடந்த 9.1.2025 அன்று சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் சின்னமலை வேளச்சேரி பிரதான சாலையில் இயங்கி வரும் சைதாப்பேட்டை-11 நியாயவிலைக் கடையில் தமிழ்நாடு முதலமைச்சர் அரிசிபெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கி திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் 34,793 நியாய விலைக்கடைகளில் 2 கோடியே 20 லட்சத்து 94 ஆயிரத்து 585 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இதற்காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதன்படி, 18.01.2025 வரை தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 87 லட்சத்து 14 ஆயிரத்து 464 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 85 சதவீதம் பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

**ஜனவரி 25–ந்தேதி வரை பொங்கல் தொகுப்பு வழங்கப்படும்!**

மேலும், மீதமுள்ள பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி வருகின்ற 25.01.2025 அன்று வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. விடுபட்ட குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பினைப் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஒட்டன்சத்திரம் தொகுதி

# வாகரையில் பசுமை மாரத்தான் போட்டி!

## அமைச்சர் அர. சக்கரபாணி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

ஒட்டன்சத்திரம் ஜன. 21-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதி, வாகரையில் தமிழர்திருநாள், தமிழ்நாடு முதலமைச்சர். மு. க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பசுமைமாரத்தான் போட்டியை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கொடியசைத்து துவக்கி வைத்துபோட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கிப் பேசினார்.

இந்நிகழ்வின்போது ஒன்றிய செயலாளர்கள், தங்கராஜ், பொன்ராஜ், ஒன்றிய துணைச் செயலாளர் ராஜ்குமார்,முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணசாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தண்டபாணி,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கலைச்செல்விஇராசுஉள்ளிட்ட இளைஞரணி,மாணவரணி நிர்வாகிகள், சார்பு அணியினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## 23 ஆம் புலிகேசி பழனிசாமி

# அமாவாசைகளை உருட்டியே அரசியல் செய்கிறார்!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கடும் விமர்சனம்!

சென்னை, ஜன. 21 -

"ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடாமல் புற முதுகிட்டு ஓடும் 23 ஆம் புலிகேசி பழனிசாமி அமாவாசைகளை உருட்டியே அரசியல் செய்து கொண்டிருக்கிறார்" என்று அமைச்சர் வி. செந்தில் பாலாஜி கடும் விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் தமது 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

"நாம முன்னுக்கு வரணும்னா நாய் என்ன... மனுஷன் என்ன? ஏறி மிதிச்சு போயிட்டே இருக்கணும்" 'அமைதிப்படை' படத்தில் வரும் டயலாக் இது. அதில் வரும் 'அமாவாசை' கேரக்டர் தான் எடப்பாடி பழனிசாமி. பலரை ஏறி மிதித்து, ஊர்ந்து சென்று, பதவியைப் பிடித்த பழனிசாமி,

"திமுக ஆட்சிக்கு இன்னும் 13 அமாவாசைதான் இருக்கிறது" என நேற்று முன்தினம் பேசியிருக்கிறார். ஆட்சியை இழந்த இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் அமாவாசையென உருட்டியே அரசியல் செய்து கொண்டிருக்கிறார் பழனிசாமி.

"2026 ஆம் வருடம் சட்டசபைக்கும் தேர்தல் வரும். இன்னும் 27 அமாவாசைகள் மட்டுமே ஸ்டாலின் முதலமைச்சராக



இருக்க முடியும். மீண்டும் அதிமுக அரசு தமிழகத்தில் அமையும்" - 2022 பிப்ரவரி 12. சேலம், தாரமங்கலம்.

"இன்னும் 28 அமாவாசைகள் மட்டுமே திமுக அரசு ஆட்சியில் இருக்கும்" - 2024 ஜனவரி 25. எக்ஸ் தள பதிவு. "திமுக ஆட்சியின் ஆயுட் காலம் 19 அமாவாசைகள்தான். நாட்கள் எண்ணப்படுகின்றன" - 2024 செப்டம்பர் 20. X தளப்பதிவு.

இப்படி ஒவ்வொரு அமாவாசைக்கும் பழனிசாமி கணக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார். அமாவாசைகள்தான் கடந்து சென்று கொண்டிருக்கிறன. ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் போட்டியிடாமல் புறமுதுகிட்டு ஓடும் 23 ஆம் புலிகேசி பழனிசாமி, இன்னும் நூறு பௌர்ணமிகளுக்கு தளபதிதான் முதலமைச்சராக தொடர்வார் என்பதை 2026 -ல் உணர்ந்து கொள்வார்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தமது 'எக்ஸ்' வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



மண்டபம் பேரூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடந்த சமத்துவ பொங்கல் விழாவில் தூய்மை பணியாளர்களுக்கு வேட்டி, சேலை வழங்கப்பட்டது. மேலும் பேருந்து நிறுத்தத்தில் உள்ள கம்பத்தில் மண்டபம் பேரூர் கழகச் செயலாளர் அப்துல் ரஹ்மான் மரைக்காயர், கருப்பு சிவப்பு இரு வண்ணக் கொடி ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு பொங்கல் வழங்கினார். இதில் நகர் துணை செயலாளர் வானதி, நகர் பொருளாளர் சீனி மீராஸா, அவைத் தலைவர் முருகானந்தம், கவுன்சிலர்கள் சாதிக் பாட்ஷா, வாசிம் அக்ரம், முஹமது மீரா சாகிப், ஒன்றிய பிரதிநிதி குலாம் (எ) சாகுல் ஹமீது, மீனவர் சங்க நிர்வாகி ஆசாத், தகவல் தொழில்நுட்ப அணி நகர் அமைப்பாளர் வெள்ளைச்சாமி, நிர்வாகிகள் களஞ்சியராஜா, ராஜ்குமார், அயூப் கான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.